உ

# நீர்கொழும்பு அருள்மிகு சித்திவிநாயகர்

# அந்தாதி

ஆசிரியர்

வட்டுக்கோட்டையூர்

புலவர்மணி, பண்டிதர் க. மயில்வாகனனார்

திருவடியில் சாத்தியது.

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்த சுவாமிகள்

நட்டபாடை தேவாரம் முதலாந்திருமுறை

அங்கமும் வேதமும் ஓதுநாவர் அந்தணர் நாளும் அடிபரவ

மங்குல் மதிதவழ் மாடவீதி மருகல் நிலாவிய மைந்தசொல்லாய்

செங்கய லார்புனற் செல்வமல்கு சீர்கொள்செய் காட்டம் குடியதனுள்

கங்குல் விளங்கெரி ஏந்தியாடும் கணபதி யீச்சரங் காமுறவே.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை

## காப்பு

(கட்டளைக் கலித்துறை)

சீரேறு கொன்றைச் சிவனுமை தந்தருள் தெய்வதமே,

நீரேறு நீர்கொழும் புற்றமர் சித்தி விநாயகனே.!

பேரேறு மந்தாதி செப்பிப் பதமலர் சூட்டவருள்

ஏரேறு தொல்லுல கன்றியென் சிந்தை இருந்தவனே.

சுபம்.

- நூல் -

உலகு தொழுமுமை போற்றிடும் ஞானக் கடகளிறே!
இலகு பரஞ்சுட ராய்இருள் நீக்கும் இறையவனே!
நிலவு தடந்திரை எற்றிடு நீர்கொழும் புற்றமர்ந்தாய்
குலவு துயர்குலம் மோதாமற் காத்தருள் கற்பகனே. (1)

கற்பகம் என்ன வழங்கும் கரதலக் கண்ணுதலே
பொற்புறு நீர்கொழும் புற்றமர் சித்திப் புகர்முகனே
கற்றறி வில்லாவென் புன்கவி காதினுக் கேறிடுமோ
உற்றிடு துன்பந் துரப்ப உலந்தனன் பாரினிலே (2)

பார்முதல் உற்றிடு பூதமைந் தாய்மதி பானுவுமாய்
சேர்தரு வேள்வி முதலொடு செப்பிடும் ஆதியுந்
ஏர்தரு நீர்கொழும் புற்றமர் ஏரம்ப ஐங்கரனே
வார்பயில் வல்லபை நாயக வந்தினிக் காத்தருளே (3)

காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடுங் கண்ணுதலே
ஏத்தும் அடியர் இடர்களை நீக்கும் இரும்பொருளே
நீத்தம் புரண்டு கடல்மண்டு நீர்கொழும் பூர்மகிபா
சோத்தம் பிரானென்று சொல்லித் திருவடி போற்றுவனே (4)

போற்றுவன் நின்னடி ஏழைக்கிரங் கென்ன எப்பொழுதும்
சாற்றுவன் நின்றிரு நாமச் சிறப்புகள் நீர்கொழும்பாய்
மாற்றறி யாச்செழும் பொன்னே வயிரமே மாமணியே
தேற்றிட யாரினி உண்டுகொல் செல்வக் கணபதியே (5)

கணபதி தன்னைமுன் காவிரி மாதைக் கடுகிடக்செய்
குணபதி தன்னையென் உள்ளக் குகைவாழ் குருமணியை
பணபதி தேடிட நீர்கொழும் பெய்திடு பண்ணவனை
நணவினை யோயிடும் சித்திகள் நண்ணிடும் பாடுமினே (6)

பாடுமின் தொண்டர் பராபரன் தந்த பரஞ்சுடரைக்
கூடுமின் இந்திர சித்தன் முனைநாள் மகமியற்ற
நாடுமின் சித்திக் கருச்சித்த நாதன் நிகும்பலையைச்
சூடுமின் தும்பிதன் தாண்மலர் தூசாம் துயர்க்குலமே (7)

குலக்கொடி யாகிய கோல்வளை மாதிவள் முன்பொருகால்
வலத்தொடு நீவதீ வந்திடக் கண்டு வயமிழந்தாள்
கலத்தொட லைமோது நீர்கொழும் புற்ற கடக்களிறே
தலத்தினில் மாழ்கித் தயங்கிடு பான்மை தகவுடைத்தே (8)

உடைத்துப் பெருகும் மடையெனக் கண்ணரீ ஒழுகிடவே
அடைத்துக் குழறி உரைதடு மாறி அகங்குழைந்து
படைத்துத் தமிழ்மாலை பாதத்திற் சூட்டிப் பரவவருள்

கிடைத்தற் கருந்தனமே நீர்கொழும்புக் கணபதியே (9)

பதியாய் அறந்தனை ஓம்புவை பாரிற் பணைக்கையனே
மதியாய் உயிர்களில் மன்னி நடந்துவை மாண்புடனே
கதியாய் விளங்குதி நீர்கொழும் புற்றுறை கார்முகிலே
விதியார் வருத்த அலந்தேம் அருள்செய் விநாயகனே (10)

நாயக! அன்பர்தம் விக்கினம் தீர்த்து நலம்புரிவாய்
தீயகத் துற்றுழல் மானென நின்று திகைத்திடுகேன்
மாயவ னார்க்குறு சாபமுன் மாற்றிக்கண் ஈந்தவனே
தாயென வந்தனை நீர்கொழும் பேய்ந்துறை சற்குருவே (11)

குருவே குமரற்கு மூத்த கரிமுகக் கோமளமே
திருவே கலந்திகழ் நீர்கொழும் புற்றமர் கற்பகநற்
றருவே அடியர் தொழச்சித்தி தந்தருள் தாழ்செவிசேர்
உருவே இனுமேன் இரங்கா திருந்தாய் உனக்கழகே (12)

அழகா இலம்போ தராகையில் அங்குசபா சங்கொண்ட
குழகா கணத்தொடு நீர்கொழும் புப்பதி காதலித்தாய்
பழகா மனமும் குழைதர பண்டு நடம்பயின்றாய்
விழியாய்! நினதகம் கல்லோ விளம்பாயெம் வித்தகனே (13)

வித்தகம் மிக்க விபுதாநீ வெம்பிணி தீர்ப்பவன்காண்
கத்துங் கடல்பயில் நீர்கொழும் புற்ற கரிமுகவா

அத்தன் எனநீயும் முக்கண்ணோ டைமுகம் கங்கைகொண்டாய்
சித்தம் இரங்கித் திருவருன் செய்திடிற் றீதுமுண்டே (14)

உண்டே வரபலம் என்னாமுன் எண்ணி அமர்பொருத
திண்டோட் கயமுகன் தன்னொடு வெஞ்சமர் செய்துபின்னை
கொண்டாய் கயவனைக் கோல மிகுத்திடும் ஊர்தியென
தண்டாப் புகழ்மலி தேனூர! தேர்கிலம் அற்புதமே (15)

அற்புதம் அன்றே அயன்மாற்கும் எட்டாத அத்தனவன்
முற்புகு தேரதன் அச்சிறுத்தாய் விண்ணோர் வேண்டிடமுன்
சிற்பர விக்கினம் தீர்த்தருள் செய்தனை சிந்தாமணியே
பொற்புறு நீர்கொழும் பாயிரத் திற்புரி இன்னருளே (16)

இரங்கிப் புரியென் அகத்தினில் எண்ணம் இனிதுறவே
வரங்கள் பெறவெண்ணித் தொண்டர் வளாகத்துள் மேவிநின்றார்
தரங்கம் எறிகடல் நீர்கொழும் புற்றமர் தாழ்செவியாய்
பரங்காண் எளியரை ஓம்பல் பயந்தாய் பரம்பரனே (17)

பரனே உமைதரு பாலகனே பாசாங் குசமேந்து
கரனே அறுமுகக் கந்தர்க்கும் மூத்த கடக்களிறே
உரனே மிகுந்த அவுணர்க்கும் ஆரருள் செய்தவனே
அரனே அமர்ந்தனை அன்பொடும் நீர்கொழும் பாலயத்தே (18)

ஆலயந் தன்னினும் ஆற்றங் கரைமற் றரசநிழல்

கோலத் திருவிழி மூன்றுடைக் குஞ்சர நீயுறைவாய்
மாலயன் காணாத சேவடி என்றன் மனத்திருத்திச்
சாலவும் கும்பிட நீயருள் நீர்கொழும் புச்சற்குருவே (19)

குருவே குறக்குலக் கோல்வளை அஞ்சக் குமரனுக்காய்
உருவே எடுத்தனை உற்றொளிர் ஞாலம் ஒருங்குநின்றன்
மருவே றகட்டினில் வைத்தே அருணலம் காட்டினையால்
திருவே கடன்மலி நீர்கொழும் பேய சிவசுதனே (20)

சிவசுத செப்பும் அறம்பொருள் இன்பொடு வீடுநீ
பவவிருள் மாற்றிமெய் ஞானம் பரப்பும் பகலவன்நீ
தவநிதி என்றிட நீர்கொழும் புற்றமர் தத்துவனே
அவநெறி மாற்றி அடிதொழ வைத்தருள் ஆரமிர்தே (21)

ஆரமிர்தங் கடைநாளண்டர் அஞ்சி நடுநடுங்கித்
தாரணி பிஞ்ஞக காத்திடு தஞ்சம் எனவிரப்பக்
காரிருள் நஞ்சுண்டு பேணிய செம்மல் கருத்தறிவாய்
ஆரினி ஓம்புநர் நீர்கொழும்பிற் சித்தி ஐங்கரனே (22)

சித்திகள் வேண்டிநின் தொண்டர் குழாங்கள் திரண்டுநின்றார்
அத்தியின் மாமுகம் கொண்டுயர் ஐங்கர ஆங்கவர்தம்
புத்தியுள் மன்னிப் புதுமைகள் பற்பல காட்டிடுவாய்
தத்திடு தெண்டிரை நீர்கொழும் புற்றாய் தருணமிதே (23)

தத்திடு தெண்டிரை நீர்கொழும் புற்றுறை தந்திமுகா
நத்திடும் அன்பர் நலிதர நாளும் நவையியற்றி
எத்திறத் தானும் இறுமாந்து நின்றிடு தானவனை
வைத்ததென்? நெற்றியில் வண்ணச்சிந் தூர திலகமென்றே (24)

சிந்தூரம் நெற்றியிற் கொண்டிடு தேவேயெஞ் சிந்தைமன்னி
வந்தூரும் இன்னல்கள் வாட்டிடு வள்ளலும் நீயலையோ
நந்தூர நங்கையர் முத்தம் நயந்திடு நீர்கொழும்பாய்
தந்தாள வேண்டுமே சித்திகள் தாயான தற்பரனே (25)

தாயுநீ தந்தைநீ சற்குரு சாமிநீ தாழ்விலாத
நேயநீ போக்கொடு நின்ற வரவுநீ நேரிலாதாய
சேயுநீ செல்வம்நீ சிந்திப்பின் வேறிலை நீர்கொழும்பில்
ஏயநின் சேவடி ஏத்திடும் இன்பருள் தேவதேவே (26)

தேவர்கள் தேவனைச் சிந்தைக்கும் எட்டாத சேட்சியனை
மூவர் முதல்வனை முக்கண்ணான் மைந்தனை வாரணத்தை
ஏவரும் ஏத்திட நீர்கொழும் பேய்ந்தநற் கற்பகத்தை
பூவடி சேவிக்கக் கிட்டாப் பொருளிலைப் பூதலத்தே (27)

பூதலர் வானவர் பாதலர் என்னாப் புகலநின்ற
தீதிலர் ஏவரும் அஞ்சத் துயர்செய் கயமுகனை
மாதொரு பாகன் பயந்தருள் வாரணன் நீர்கொழும்பான்
ஓதிடும் ஆகுவின் ஊர்திய தாக்கிய ஒண்கைநன்றே (28)

நன்றே மிகுத்திடும் நாஞ்செய்த தீவினை சென்றகலும்
என்றே தொழும்பர் அவல்பணி காரம் இருங்கனிகள்
குன்றா தருச்சிக்கக் குஞ்சர நீர்கொழும் புற்றிருந்தாய்
என்றோ திருவடித் தீக்கைதந் தாள்வ திறையவனே (29)

இறைப்பொழு தேனும் இணையடி எண்ணா வெறுவினையேன்
மறைப்பொரு ளாகிய வாரண மேபுக்கு நீர்கொழும்பில்
முறைப்படு கின்றனன் வாளா விருத்தல் முறையலவே
கறைப்படு கண்டர் தரும தலாய்வந்து காத்தியின்னே (30)

இன்னே வருதியென் ஏழைநெஞ் சேயிம வான்மருகன்
மின்னே ரிடையுமை தாமிவர் தந்த மழகளிறு
பொன்னேர் கதிர்முடிப் புங்கவன் நீர்கொழும் புற்றிருந்தான்
அன்னே அனையன் அமையமீ தள்ளி வழங்குவனே (31)

வழங்குவன் செல்வம் குலங்கல்வி வாய்மை வளரிளமை
அழுங்கல் இலாதநல் லாயுள் அறந்திறம் பாமையுடன்
முழங்கும் கடல்மலி நீர்கொழும் பேய விநாயகன்றான்
தழங்கரும் தேனன்ன இன்னருள் கூட்டித் தருகுவனே (32)

தருநீழல் வைகுஞ் சுரேசன் தருமகள் கேள்வனையன்
உருநீடும் அந்தி முகங்கொண்ட ஓங்கார மூர்த்தியெந்தை
திருநீடு நீர்கொழும் புற்றுரை சித்தி விநாயகன்றன்
குருநீடு கோலங்கண் டேத்திடக் கோடிமேற் கண்ணிலையே (33)

கண்ணிலன் சேவடி; காதலித்தே யுன்றிரு நாமத்தை
எண்ணிலன்; நீர்கொழும்பெந் தாய்நீ யமர்ந்த திருக்கோயில்
நண்ணிலன்; மெய்ஞ்ஞான நூல்களை நாடொறும் நெட்டுருத்தான்
பண்ணிலன்; என்னினும் பார்த்திரங்காய் நால்வாய்ப் பண்ணவனே (34)

பண்ணாய் இசையாய் இசையின் பயனாய்ப் பரஞ்சுடராய்
எண்ணாய் எழுத்தாய் இருவினை மாற்றும் தனிமருந்தாய்
கண்ணாய் மணியாய் நீர்கொழும் புற்றமர் கற்பகமாய்
விண்ணாய் விரிதரு பூதமும் ஆனாய் விழுப்பொருளே (35)

விழுப்பொருளாய விசுவேசர் தந்த திருமதலாய்
பழுக்குலை விஞ்சிடு தெங்குயர் பட்டின நீர்கொழும்பாய்!
அழுக்குடல் கொண்ட அறிவிலென் ஆரஞர் உற்றுழல்கேன்
இழுக்கல்ல வோவிங் கலைவ தேரம்ப சற்றிரங்கே (36)

தோழியை வினாதல்

அலைமேய தெண்கடல் நீர்கொழும் பத்தி முகன்கிரியில்
சிலைமேய வேலன்ன செவ்விழி யீர்செலக் கண்டதுண்டோ
இலைமேய பூணொளிர் குன்றிரண் டோடும் இடையில்தாம்
நிலைமேய மானொன்று நீள்விழியீரின் நெறிதனிலே (37)

நெறியில் நெறிபோய நீசரும் நின்றனை வேண்டுவரேல்

பிறிவில் வகைநின்று பேறுகள் நல்கிடும் பெற்றியனே
எறிவன் றிரைக்கடல் நீர்கொழும் புற்ற இனங்களிறே
அறிவிலன் றன்னைநீ கைவிடல் ஏற்றுக் கறைகுதியே (38)

அறைகுதி அன்னை அபிராமி தந்த விநாயகனே
மறைவடி வாகிய மாநிதியே ஆகு வாகனனே
துறைமலி நீர்கொழும் புற்றமர் துங்கக் கரிமுகனே
குறைமுடிப் பாரிலைக் கூறவும் ஒண்ணாது கோமளமே (39)

கோமள ஐங்கர குஞ்சர தற்பர மாமதலாய்
மாமகள் நாமகள் போந்து வணங்கிடு அற்புதனே
பாமக ளாகிய ஔவைதன் பத்திக் குருகினைநீ
காவளர் சீர்பயில் நீர்கொழும் புற்றமர் கண்ணுதலே (40)

உற்றிடு நற்றுணை நீயென எண்ணி உவந்திருந்தேன்
கற்றவர் நெஞ்சினுட் புக்குப் பிளிறிடு கற்பகமே
பொற்பமர் தாளிணை போற்றாத புன்மையன் தானெனினும்
சிற்பர எந்தமைத் தாங்கிடு செல்வக் கணபதியே (41)

செல்வக் கணநாத சீர்மல்கு தேசிக மாமணியே
அல்லல் களைந்திடும் ஆனை முகாவென் றழுதரற்றி
எல்லவர் தாமும் சதுர்த்திநன் நோன்பை இயற்றிடவே
மல்லல் அருளுவை நீர்கொழும் பில்வரு மாபரனே (42)

பரணே பழமறை தேடியுங் காண்பரும் பான்மையனே
அரனே மலைமகள் தானே உலகென் றறியவைத்தாய்
உரனே மிகுத்த தகுவனை முன்னாண்ட ஒண்மருப்புக்
கரனே இருந்தனை நீர்கொழும் புற்றெமைக் காப்பவன்றே (43)

அன்று குறுமுனி குண்டிகை கொண்ட அருட்புனலைத்
துன்று தமிழ்ப்பொன்னி என்ன நடத்தினை தும்பிமுகா
நன்று புரிந்திலன்; ஞானம் பயிலேன்; நவைபுரிவேன்
என்று விடுக்கிலிர்; நீர்கொழும்பீர் இன்னல் தீர்த்திடுமே (44)

தீர்த்திடும் முன்புபெய் பாதக மாயினசெந் தேன்பிலிற்றி
வார்த்திடும் செங்கமலப்பதம் வந்திக்க வாழ்வுயர்த்தும்
ஆர்த்திடும் தெண்கடல் நீர்கொழும் புற்றமர் ஆனைமுகன்
பார்த்திடும் ஊறனு காவனை தன்னடித் தொண்டரையே (45)

தொண்டுசெய் செம்மைத் திருவிளங் கையெனுந் தொன்னகரார்
கண்டுசெய் கோட்டத்தில் நீர்கொழும் புற்றமர் கற்பகமே
விண்டிடு யாழ்நாட்டு வித்தகர் செய்பணி ஏற்றிருந்தாய்
மண்டிடு பேரருள் மாரி பொழிந்துநல் வாழ்வருளே (46)

அருளும் பரிசினின் மாங்கனி தீங்கரும் பாய்மலரும்
தெருளும் பரசுங் கரத்தேந்து சித்திவிநா யகனே
மருளும் துதிக்கையில் எள் ளுண்டைவைத் தாய் மகிழ்ந்துதுன்ப
இருளில் அலந்தனம் நீர்கொழும் பாய்யெமைக் காத்தருளே (47)

காக்கும் கணபதிநீ பாலன் தருணனுத் தண்டனுமாய்
ஊக்கும் விசயன் உச்சிட்டன் சிம்மன் சிருட்டியனாய்
வகீகும் துவிசன எனவும் விளங்குவை பல்லுருவில்
தேக்கும் புகழினை நீர்கொழும் புற்றதெம் புண்ணியமே (48)

புண்ணிய மேதுகொல் செய்தேன் புராரியின் மூத்தபிள்ளை
திணிண்யின் ஏரம்பன் தேயம்வந் தேத்திடும் ஏகதந்தன்
பண்ணியம் மோதகம் ஆதிய பக்கணம் வேண்டுபரன்
தண்ணின் சேவடி நீர்கொழும் பிற்சென்று தாழ்ந்தெழவே (49)

தாழ்ந்தெழு வார்கதிர் நீள்முடித் தாழ்செவிக் கற்பகமே
போழ்ந்தெழு துன்பம் மனத்தை அலைக்கப் புலந்துநிதம்
ஆழ்ந்திடு கின்றனன் விட்டு திகண்டாய் அலைசுருண்டு
வழ்ந்திடு மாகடல் நீர்கொழும் புற்ற விழுப்பொருளே (50)

விழுப்பொரு ளாய கணேசன் விபுதருங் காண்பரியான்
கழுக்கடை ஏந்திதன் கைக்கனி கொண்ட களிமுகவன்
இழுக்கிலர் வாழ்தரு நீர்கொழும் புற்றிடும் ஏந்தலவன்
அழுக்குள மாற்றிடும் அன்பர் வந்து பரவுமினே (51)

அறிவுரை வினாதல்

பரவிடு முப்புரி நூலணி சான்றீர் பதம்பணிந்தேன்

விரவிடு சந்தணி வேங்கையொ டென்மகன் நீர்கொழும்பில்
அரவணி தும்பி முகத்தவன் ஐங்கரன் றன்மலையில்
கரவுறு நீளதர் தாந்தழீ முன்வரக் கண்டதுடே (52)

கண்டடி ஏத்துமின் கோடிகதிர் விஞ்சுபே ராளனும்
பண்டயன் சென்னியிற் குட்டிய பார்வதி பாலனுன்
திண்டிற்ற பூதர்கள் சேவைகள் செய்திட வறீறிருந்தான்
மண்டிடு தொண்டரிர் நீர்கொழும் பில்லுயர் மாட்சியதே (53)

நீர்கொழும் புற்றமர் சித்தி விநாயகன் முன்பொருகால்
ஏர்கெழு ராவணன் செங்கையிற் கொண்ட அருட்குறியை
சீர்கெழு சேயென வந்தவன் சற்றுத் தாமதிக்கப்
பேர்கெழு கோகணம் ஆக்கிய பெற்றியும் பேசரிதே (54)

அரிய பெருமான்என் சிந்தை அகத்தில் அமர்பெருமான்
பெரிய பெருமான் பிள்ளைப்பெரு மானைங் கரப்பெருமான்
கரிய குரண்டந் திரிநீர் கொழும்புத் தனிப்பெருமான்
வரிய சிறைய வண்டிமிர் மும்மதநல் வாரணனே (55)

வாரணத் தானைத்தங் கோகென விண்ணோர் வழுத்துவெள்ளை
வாரணத் தான்றொழு தேவினை, வான்வதி தெய்வதமாம்
வாரணத் தின்புயந் தோய்ந்திடு வள்ளலின் முன்னவனை
வாரணஞ் சேரெக்கர் நீர்கொழும்பு புற்றடி வாழ்த்துமினே (56)

வாழ்த்திடு தொண்டர்க்கு வானக போகங்கள் தந்துதலை
தாழ்த்திடு பத்தர்க்கு விக்கினந் தீர்த்துத் தனைமனத்தே
ஆழ்த்திடு ஞானியர் உள்ளுறை நீர்கொழும் பற்புதன்தாள்
வழ்த்திடும் வெம்பவ வேரினை வந்தினி வேண்டிடுமே. (57)

வேண்டிடு கும்பிக் குணவினைத் தேடி மிகவுநொந்தேன்
ஈண்டிடு நல்வினை ஏதொன்றுஞ் செய்யா இரும்புநெஞ்சேன்
தூண்டிடு சுந்தர சோதியே தும்பிநீ கைகொடுத்தே
ஆண்டிடு நீர்கொழும் புற்றமர் ஐங்கரத் தற்புதனே. (58)

அற்புதங் காணடை யார்புரஞ் செற்ற அமலனுக்குப்
பொற்புறும் ஆன்மார்த்த பூசை புரிதல் கடமையென்றே
சிற்பர! நீர்கொழும் புற்றமர் தேவ! தெரிந்துணர்ந்து
கற்றிட முன்னம்நீ காட்டினை அன்பநீ ரீட்சாரத்தை (59)

காட்டினை யோகியர் காணக் கவினார் கமலபதம்
வாட்டினை தொண்டரின் வல்வினை வேதனை வந்துமுன்னே
மேட்டினை ஞெண்டுகள் மேவிடு நீர்கொழும் புற்றமர்ந்தார்
தாட்டுனை போற்றினன் சாமிநீ சித்திகள் தந்தருளே (60)

சாமியே நீர்கொழும் புற்றமர் தற்பர நீயொருநாள்
ஆமுறை போந்து விகட நடமாட அந்நெடுமால்
நேமியைக் கௌவிய காபாலம் பற்று நெகிழ்ந்ததுவால்
ஏமுறு வார்சுரர் மற்றறை இன்னேயுங் காட்டுகென்றே (61)

இன்னதோர் தன்மையன் என்றுமே ஏவருங் காண்பரியோன்
முன்னவன் ஈசன் தருமுத லேமத வாரணனே
புன்னலங் கானலின் நீர்கொழும் புற்ற புராதனனே
கன்னலே தேனேநீ காத்தருள வாய்கரு ணாகரனே (62)

கருணா கரனே கலைஞானக் கன்றேயென் கற்பகமே
அருணா ரவிந்த அணிமலர்த்தாள் சென்னி வைத்தருள்வாய்
திருநா மமோதித் தொழுவார்க் கருள்செய் திருமதலாய்
குருநாத நீர்கொழும் புற்றமர் கோமள குஞ்சரேன (63)

சரமும் அசரமும் சாற்றிடில் உன்றன் அகட்டடக்கம்
சுரரும் முனிவருஞ் சூக்கமும் நூலமுஞ் சோதியுநீ
பரவும் பதிகள் பலகோடி நீர்கொழும் புள்ளடக்கம்
அரவம் புனைசுத நின்னை அனைத்தினும் வாழ்த்துவனே (64)

வாழ்த்துவர் வந்துன் திருக்கோயில் வாணியுஞ் செந்திருவும்
தாழ்த்துவர் கூடித்தம் நீண்முடி நான்முகர் நாரணரும்
ஊழ்த்திரு புன்னை உயர்தரு நீர்கொழும் புற்றமர்நீ
ஆழ்த்துரை அன்றோ அருட்புனல் ஆழியுள் அன்பரையே (65)

ஆழியை வேண்டிமுன் ஆயிரம் மாமலர் இட்டறைஞ்சும்
ஆழியை நேர்நிற நாரணற் கன்றருள் அண்ணறன்தேர்
அழியை இயற்றிட அற்புதம் ஆக்கினை நீர்கொழும்பாய்

ஆழியைப் பூண்டிடு வல்லவை காந்த! அடைக்கலமே (66)

அடைக்கலம் என்றுன் திருவடி தொட்ட அடியருக்குப்
படைக்கலம் அங்குச பாசாங் கொம்பு பரித்தவனே
கிடைப்பரும் பேரருள் ஆரமிர் தூட்டி அகமிழ்வாய்,
உடைத்தெழும் ஆழிசேர் நீர்கொழும் புற்ற மைசுதனே (67)

உமைசுதன் என்கோ உணராப் பிரணவ ரூபனென்கோ
அமைநிகர் தோளியாம் வல்லபை நாடும் அழகனென்கோ
இமையவர் என்றுங் கனவிலுங்கா வெம் இறையென்கோ
எமைமுனம் ஆண்டருள் நீர்கொழும் புற்றுறை எந்தலையே (68)

ஏந்தலை ஏழையர்க் கெய்ப்பினில் வைப்பாம் இறையவனைப்
பாந்தளை பொன்னரை நாணாப் பரித்தருள் பண்ணவனைச்
சாந்தனைச் சண்முக சாமிக்கு முன்வருந் தற்பரனைத்
தீந்தமிழ் நீர்கொழும் புற்றமர் தெய்வத்தைத் தேடுமினே. (69)

தெய்வதம் உண்டென எண்ணார் அகந்தூய்மை பேணுகிலார்
உய்வகை ஓரார் உறுதனஞ் சேர்ப்பர் உலுத்தரவர்
கைதவ மாக்களைப் பாடிப் பயனென் கவிவா ணருள்ளரீ
ஐயனை நீர்கொழும் பப்பனை ஏத்தி அருள்பெறுமே (70)

ஏத்திடு பூதரின் சேனைக் கதிபனை, இன்மலர்தூய்ச்
சாத்தி வழிபடு சக்கர பாணிக் கருளினனை

நாத்தழும் பேறிட வாழ்த்துமின் அன்பரிர் நீர்கொழும்பில்
காத்திட மற்றொரு தெய்வமும் உண்டோவிக் காசினிக்கே (71)

மற்றொரு பற்றிலர் வானவர் சித்தர்கள் மாமுனிவோர்
கற்றவர் நற்றவர் காண்பருங் காட்சி விநாயகனை
பொற்றிருப் பாதத்தைத் தூக்கி நடமிட்ட புண்ணியனை
அற்பகல் எண்ணாது நீர்கொழும் பேத்திட ஆக்கமுண்டே (72)

ஆக்கம் வளரும் அரும்புகழ் கூட்டும் அமைதிதரும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வம் புலமைத் திற முயரும்
பூக்கும் கொடைநலம் பொன்னொளிர் தேசு பொருந்திவரும்
நீக்கம் இலாதமர் நீர்கொழும் பெந்தை குறுநகையே (73)

குறுநகை கொண்டன்று கூடார் புரஞ்செற்ற கொற்றவில்லி
பெறுதரு துங்கக் கரிமுகப் பிள்ளை பெரும்பெருமான்
செறுதரு செற்றம் பொறாமை அழுக்காறு தீச்சொலற்று
உறுமுறை நாம்வாழ நீர்கொழும் புற்றனன் அற்புதமே (74)

உத்தமர் ஏத்து திருவிளக்கை என்னும் ஊரினர்தாம்
மெத்திய பத்தியர் மேவுதொன் னாளினில் நீர்கொழும்பில்
சித்தி விநாயக சேவடி கைதொழக்கோ யில்கண்டார்
அத்தலத் தின்னும் அருளு திறாய்நின் அடியருக்கே (75)

அடியர்க் கெளியாய் அமல விநாய ஐங்கரனே

மடியா உளமுடை நாரையீர் நம்பி முனமளித்த
கடியார் நிவேதனம் உட்கொண்டு காட்சியும் நல்கிணையால்
விடியாத் துயர்களை! நீர்கொழும் புற்றமர் வித்தகனே (76)

வித்தக வரீ மகோற்கட ஆகுவின் மேற்வருவாய்
மத்தக ஐங்கர மோதக கைத்தல் மாட்சியனே
கத்திடு மாகடல் நீர்கொழும் புற்றமர் காட்சியனே
அத்தநின் சேவடி என்றலை வைத்தருள் அற்புதனே (77)

சேவதில் ஏறிடு செஞ்சடை ஈசன் திருமலாய்
நாவதில் நின்றிடு நாமம் நவின்றிட நல்லருள்செய்
ஏவன கண்ணினன் வல்லபை எண்ணும் மழகளிறே
தாவகல் நீர்கொழும் புற்றுறை தற்பர நாடுணையே (78)

துணையடி பேர்த்துநீ ஆடிடத் தொந்தி அசைந்திடலும்
அணைதரு சந்திரன் ஏளனஞ் செய்யவெஞ் சாபமெனும்
கணைதனைத் தொட்டனை; தேவர்கள் வேண்டத் தயைபுரிந்தாய்
புணையென நீர்கொழும் புற்றாய் புகல்தாண் பொருகளிறே (79)

புகலிலை என்றே அமரர் புலம்பிட நுந்தையவர்
மிகவரு நஞ்சை அயின்றே விடுத்தும் உண்டலையோ
இகமதில் ஆசைச் சுறவெனை ஈர்த்தே அலைத்திடுங்காண்
தகவினர் வாழ்நீர் கொழும்பாய் தரிக்காது காத்தருளே (80)

தகவினர் வாழ்தரு நீர்கொழும் புத்தளி தன்னினுள்ளும்
அகமதிற் சற்றும் அழுக்கில் அடியர்தஞ் சிந்தையுள்ளும்
மிகவுறை சித்தி விநாயக நின்னடி ஏத்துநர்தாம்
இகமதிற் பெற்றிடு பண்டம தென்கொல் இயம்புதியே (81)

இசைத்தனர் சங்கம் எடுத்தனர் சல்லரி எவ்விடையும்
இசைத்தமிழ் வித்தகர் ஏத்தினர் பாடல்கொண் டெம்மருங்கும்
இசைக்கிடு மங்குசத் தோடுறு பாசமும் ஏந்திடுவாய்
இசைத்திடு மாழிய நீர்கொழும் பாயருள் ஈகுவையே (82)

ஈய்குறை சட்டிநன் னோன்பை இயற்றினர்க் கட்டசித்தி
தோய்குவை மெய்யடி யர்கோட்டு கண்ணரீ புதுமழையில்
காய்குவை நீர்கொழும் புற்றாய் கயமுகன் தன்னைமுனம்
ஆய்குவை அல்லையென் தீரா அவலம் அடற்கரியே (83)

தீரா அவலம் புயல்போல வந்தென்னைத் தீண்டிடினும்
பேரா உறுதியும் பேச்சினில் நேர்மை பிறர்நலத்தில்
சோராத் திறமாதி நந்தான் நீர்கொழும்புத் தந்திமுகா
ஓரா வினையேன் உழல்கின்றேன் உன்தாட் கடிமையன்றே (84)

தோழி கூற்று (இலேசவணி)

அன்றே நெடுந்தேரில் அத்திமுகா நீர்கொழும் பதனில்

நன்றே பவனிவர நங்கைநல் லாளவள் கண்கலுழ்ந்தாள்
குன்றா வயப்பூதர் துன்னவெழு தூசி கூடுதலால்
நின்றே விளைந்திட்ட நீர்மையென் றாள்தன் தோழியர்க்கே (85)

நீர்மை பிறரால் உணரப் படாதவன் நீர்கொழும்பில்
சீர்மை மிகுந்த வணிகர் திருத்தளி வறீறிருந்தோன்
கூர்மை தருதளி யாழகத் தார்பணி கொண்டுவந்தோன்
பார்வை கிடைத்திடும் பாவிநெஞ் சேயென் படரினியே (86)

படரொளி ஞாயிறு கோடி பிரபையின் நீண்முடியும்
இடரிலை என்னா இயம்பிடு பான்மையின் ஐங்கரமும்
தொடருறு பாரதம் தீட்டிய கொம்பும் துணைடியும்
சுடருறு மங்குச பாசமும் என்றும் துணையெமக்கே (87)

துணையாம் எனநின்று தொன்னெறி காட்டிடு தூய்மையனே
பணையொடு கண்டல் பயில்நீர் கொழும்பமர் பண்ணவனே
புணையாம் எனவந்து துன்பத் துயர்க்கடல் நீந்தவைப்பாய்
இணையார் அடித்தலம் என்றென்றும் ஏத்தி இறைஞ்சுவனே (88)

அடித்தலம் போற்றிடும் அன்பர் அலக்கண் அகற்றிடுவோன்
முடித்தலம் தாழ்த்திடு விண்ணவர் வந்திங்கு முந்துகிறார்
மடித்தெழும் ஆழிய நீர்கொழும் புற்றமர் மாபரனே
பிடித்தெழு வேதனைப் போழ்துளம் பேரா வழியருளே (89)

வழியிலை என்றே இனியென வாடுகின் றீர்கயிலை
வழியிலை பிஞ்ஞகன் ஈன்றிடு வள்ளற் பிரான்றூய
வழியிலை என்பார்க்கும் வாடா வகைநல் வளமுருள்வான்
வழியிலைத் தாருநீள் நீர்கொழும் புற்றான் வரந்தருமே (90)

தருவான் தனங்கல்வி தண்ணளி வரீந் தகவுடைமை
வருவான் வழிக்குத் துணையாகி வாதைகள் மாற்றிடுவான்
மருவார் குழலினாள் வல்லபை வாழ்த்திடு நீர்கொழும்பான்
ஒருவா வினையை பொடிசெயும் உற்றுவந் தாட்படுமே (91)

ஆட்படும் அன்பருக் கைங்கரன் செய்யும் அருட்செயல்கள்
நாட்படும் கூறிடில் நீர்கொழும் புற்றுறை நாயகனின்
தாட்டுணை அன்றிப் பவக்கடல் தாண்டிடத் தோணியிலை
பூட்கைமு கத்தேவை போற்றி அருளறம் பூணுமினே (92)

இடமணித்தென்றல்

அறங்கெழு நீர்கொழும் புற்றமர் நந்தி முகன்கிரியில்
புறங்கெழு தெய்வநம் போற்றாக் குடிவரு பூங்குயிலே
நிறங்கெழு நின்னூர் நிகேதன நீண்மணி ஓசையது
மறங்கெழும் எம்மூரில் முப்போதும் கேட்கும் வருந்தலென்னே (93)

போதுசேர் வேதாவும் பொன்னைப் புணர்ந்தோனும் போற்றுகின்ற
மாதுசேர் பாகர் மகிழ்ந்தருள்செய் ஆனை மாமுகனை

ஓதுசீர் நீர்கொழும் புற்றருள் ஒற்றைவெண் கொம்பினனை
தீதுநீர் உள்ளத்தீர் சென்னியெற்றித் தாழ்ந்து சேவியுமே (94)

சென்னியிற் சேவடி சேர்த்துமின் செய்த பவமகலும்
இன்னருட் கண்ணின் ஒளியினில் தோய்ந்து குளித்திடுமின்
பன்னரும் நாமங்கள் சொல்லிப் பரவுமின் நீர்கொழும்புக்
கன்னலைத் தேனைக் கணேசனை அன்றிப் புகலிலையே (95)

புகலிலை என்றே புலம்புதிர் என்னே புழைக்கைமுகன்
அகமதில் மேயவன் அற்புதன் ஐங்கரன் ஆகுயர்த்தோன்
பகமலை வேல்விடு பண்ணவன் முன்னவன் பார்பதிசேய்
இகமதில் நீர்கொழும் புற்றானவனருள் வாரியன்றே (96)

வாரி சடையில் இருத்திய வானவன் தன்புதல்வன்
வாரி அடுத்திடு நீர்கொழும் புற்றமர் வாழ்முதல்காண்
வாரி முரசொடு சச்சரி வந்து முழங்குதிரு
வாரி யுளோலக் கம்வழுத்தக் கண்கோடி வாய்ப்ப தென்றே (97)

என்றும் இனியாய் இபமுக சித்தி விநாயகனே
நன்றும் எனையஞ்சல் நம்பீ! எனநவில் வாருமிலை
ஒன்றும் வினைசுட உற்றலைந்தேன் என்முன் ஓடிவந்து
துன்றுங் கடன்மலி நீர்கொழும் பாய்துயர் தீர்த்தருளே. (98)

துயரென் செயும்வல் வினைத்தொடர் என்செயும் துட்டருளார்

அயர்வின்றி யாற்றும் அவலங்க ளென்செயும் நீர்கொழும்பில்
பெயர்வின்றி நின்ற பெரியோன் பிறங்கு முறச்செவியோன்
உயர்குன்றின் ஞாயிற்றின் மேலோன் உளக்குகை உள்பொழுதே (99)

பொழுது புலர்காலை நீராடிப் போதுகைக் கொண்டுநின்றே
அழுது விழிநீர் உகுத்திட்டு நீர்கொழும் பத்திமுக
முழுது லகாளியெம் சித்தி விநாயக வாழியென்றே
தொழுது பணிவார் தமையேத் திடுமிந்தத் தொல்லுலகே. (100)

சுபம்

நீர்கொழும்புச் சித்திவிநாயகர் அந்தாதி

முற்றிற்று.